மனையிலும் செயல்படுகின்றன. இவற்றைத் தனியான மருத்துவ மனைகளாக நிறுவ முடியுமா என்பதற்கு நிதி வசதிக்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று தான் நான் சொல்லி இருக்கிறேன். ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்ற மருத்துவ மனைகளில் இதற்கான தனிப்பிரிவுகள் துவக்கப்பட்டு, அதற்காக தனியாக மருத்துவர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எம். மோசஸ் : தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மிகவும் தீவிரமாக அமல்படுத்த வேண்டுமென்று நாம் எல்லோரும் ஒரே கருத்துள்ளவர்களாக இருக்கிறோம். அப்படி இருக்கிற சமயத்திலே ஒரு தாய், சுகமாகக் குழந்தை பெறுவாள் என்பது, நல்ல மருத்துவமனையில் தனக்கு சிகிச்சை கிடைக்கும் என்ற நம்பிக்கை வந்தால் தான், அப்போதுதான் குடும்பநலத் திட்டமும் முன்னேறும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே, தனியாக குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் ஒவ்வொரு டிஸ்டிரிக்ட் ஹெட்குவார்ட்டர்சிலும் தனி ஆஸ்பத்திரிகள் நிறுவ அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(விடை இல்லை).

திரு. பெ. சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் கவர்ன்மென்ட் ராஜாஜி ஆஸ்பிட்டல் இருக்கிறது. அதில் குழந்தைகள் நல வார்டுக்கு நானே சென்று பார்த்தேன். மிக மிக வசதிக் குறைவாக அந்த வார்டுகளில், இடப் பற்றாக் குறை, கருவிகள் பற்றாக்குறை, மருந்து பற்றாக்குறை இருந்தன. டாக்டர்கள் பற்றாக்குறை இல்லாவிட்டாலும், இந்த பற்றாக் குறைகள் இருக்கின்றன. முதியவர்களுக்கு வைத்தியம் செய்வதை விட குழந்தைகளுக்கு வைத்தியம் செய்வது மிகவும் முக்கியம் என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டு, அதற்காக தனிக் கட்டிடம் அதற்கு தனிப்பட்ட அக்கறையை இந்த அரசு செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கேள்விக்கு சம்பந்தம் இல்லாத வினாவாக இருந்தாலும், இது குறித்து தனியாகக் கொடுத்தால் அரசின் நிதிநிலைமைக் கேற்ப அரசு பரிசீலிக்கும்.

மேச்சேரி ஆடுகள் இனவிருத்தி

*3787—திரு. கே. அர்ஜுனன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) மேச்சேரி ஆடுகளின் இன விருத்திக்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

1990 மார்ச் 22]

(ஆ) அவற்றை வளர்க்கும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை அல்லது மானியம் வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மேச்சேரி ஆடுகள் இனவிருத்திக்காக சின்னசேலம் அரசு ஆட்டுப் பண்ணையில் வளர்க்கப்படுகின்றன. அப்பண்ணையிலிருந்து சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின் கீழ் மேச்சேரி ஆடுகள், இன விருத்திக்காக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

(ஆ) பல்வேறு ஆடு வளர்ப்புத் திட்டங்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மேச்சேரி ஆடுகள் வாங்க (20 பெண் ஆடுகள் மற்றும் 1 கிடா) ஆடுகளின் விலையாக ரூபாய் 7,000-ஐ அரசு, மத்திய அரசு திட்டத்தின் மூலம் இந்து ஆதி திராவிடர்களுக்கு 50 விழுக்காடு மானியமும், சிறப்பு கால்நடை அபிவிருத்தித் திட்டம் மூலம் சிறு விவசாயிகளுக்கு 25 விழுக்காடு மானியமும், குறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு 33 1/3 விழுக்காடு மானியமும், ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கு 50 விழுக்காடு மானியமும், ஒருங்கிணைந்த மலைவாழ் மக்களுக்கு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 50 விழுக்காடு மானியமும் வழங்கப்படுகின்றன.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே மேச்சேரி பகுதி கடுமையான வறட்சிப் பகுதியாக இருப்பதால், இந்த இன ஆடுகளை அந்தப் பகுதியில் வளர்ப்பது முக்கிய தொழிலாக இருக்கிறது. அதிக எடையுள்ள கறியைக் கொடுக்கும் அந்த இன ஆடுகள் இப்போது அழிந்து கொண்டிருக்கின்றன. மேச்சேரியிலே ஒரு ஆராய்ச்சி மையம் இப்போது இருக்கிறது. சின்ன சேலத்தில் இருக்கும் ஆட்டுப்பண்ணையை விட்டுவிட்டு அந்த ஆராய்ச்சி மையத்தை இதற்காகப் பயன்படுத்தவேண்டுமென்றும், வறட்சியால் பாதிக்கப்படுகின்ற நேரத்தில் அங்குள்ள விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுமா என்றும், வறட்சிக் காலங்களில் அந்த ஆடுகளுக்கு இலவச தீனி வழங்க மானியம் வழங்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மேச்சேரியில் இருப்பது ஆராய்ச்சி மையம், சின்ன சேலத்தில் இருப்பது ஆட்டுப்பண்ணை. விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டு விவசாயிகள் ஆடுகள் வளர்க்க ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். அதற்கு மேலும் திட்டங்கள் நல்லமுறையில் வளர, விவசாயிகளுக்குப் பலன் அளிக்கும்

வகையில் நிறைவேற்ற முடியுமா என்பதையும் இந்த அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலோடு வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நேரங்களில் மந்தை, மந்தையாக ஆடுகள் சாகின்ற நிலைமை ஏற்படுகிறது. அப்படி சாவதைத் தடுக்கின்ற வகையில் அரசாங்கத்தின் மூலமும், தனியார் வைத்தியர்கள் மூலமும் அவற்றைப் பார்வையிடச் செய்து அவற்றுக்கு இலவச சிகிச்சை அளித்து அந்த வகையில் அந்த ஆடுகளுக்கு சிகிச்சை அளித்தது குறித்து அவற்றின் உரிமையாளர்களுக்கு ஒப்புதல் தரப்படுமா? எனவே, அதற்குத் தேவையான அளவுக்கு டாக்டர்கள் நியமிக்கப்படுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படித் தமிழகத்தில் உள்ள அனைத்து ஆடு உரிமையாளர்களிடமும் ஒப்புதல் பெறவேண்டும் என்கின்ற வகையில் அரசிடம் திட்டம் எதுவும் இல்லை. இது நடைமுறை சாத்தியமற்ற ஒன்று என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி மருந்து

*4191—**திரு. கா. அண்ணாதுரை :**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது கால்நடைகளுக்குப் போடக்கூடிய தடுப்பு ஊசி மருந்து தனியார் மருந்துக் கடைகளிலும் கிடைக்கிற வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கால்நடை நோய்த் தடுப்பு மருந்துகளைத் தனியார் மருந்துக் கடைகளில் விற்பனை செய்வது இயலாது.